உ






# பூர்ண பலம்

## ஆன்மீக மின் சஞ்சிகை (SPIRITUAL E-MAGAZINE)

ஸ்ரீ மஹாபெரியவா வேத வ்ருக்ஷ ஸம்ரக்ஷண சங்கம் டிரஸ்ட் மாத வெளியீடு

(மார்கழி – DECEMBER – 2022)




ஸ்ரீ மகா பெரியவா பூர்ண பலத்துடன்

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

"நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே இராம என்ற இரண்டெழுத்தினால்"

# உள்ளடக்க அட்டவணை


தோரண வாயில் .......... 4

அப்பாலும் அடி சார்ந்தார் .......... 5

அறிய (அரிய) ஆலயம்: அற்புத தகவல்கள் .......... 7

மஹாபெரியவா அருளுரை .......... 9

பதிகம் பற்று .......... 11

தாவர நோய்கள்: இந்துக்களின் அற்புத மூலிகை அறிவு .......... 13

அறிவீர் அன்னதானத்தை .......... 16

ஆணிவேர் .......... 18

இந்த ஆன்மீக மின் சஞ்சிகை விற்பனைக்கு அல்ல.

ஆசிரியர்: கி. வேணுகோபால்
இணை ஆசிரியர்: ச. இராஜலக்ஷ்மி

எண்ணம் மற்றும் வடிவம்: VVSS Trust-இன் நண்பர்கள்

பக்கம் 7-இல் உள்ள படம் கூகிள் படத் தேடல் (Google Image Search) மூலமாய் பெற்றவை. இவை விளக்க நோக்கத்திற்காக மட்டுமே.

மற்ற படங்களின் அனைத்து உரிமைகளும் ஸ்ரீ மஹாபெரியவா வேத வ்ருக்ஷ சம்ரக்ஷண சங்கம் டிரஸ்டையே (VVSS Trust) சாரும்.

இந்த மாத பிரசுரம் வெளிவர உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எங்கள் நன்றி.

# தோரண வாயில்

## ஆசிரியர் முன்னுரை

அன்பார்ந்த ஆஸ்திக பெருமக்களுக்கு அன்பான வணக்கம்.

இந்த இதழ் நமது பூர்ண பலத்திற்கு முதலாவது ஆண்டு. ஆம்! காலம்தான் வெகு வேகமாய் ஓடுகிறது. இதுவரை தொடர்ந்து ஆதரவு அளித்து வந்த உங்களுக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இதழிலும் வழக்கம் போல கட்டுரைகள் உண்டு. மஹாபெரியவாளின் அனுகிரஹத்தால், நிறைய புதிய அறிமுகங்கள் கிடைத்து உள்ளன. அவர்களும் ஆர்வத்துடன், புத்தகங்கள் வாங்கவும், மரக்கன்றுகளை நடுவதற்கு மிகுந்த ஆர்வம் காட்டுவது மனதிற்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. இன்றுபோல் என்றும் உங்கள் ஆதரவு தொடர வேண்டும் என வேண்டி, விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

வழக்கமாக இடம் பெரும் விஷயங்களோடு, இந்த இதழில் மகா பெரியவாளை தரிசித்து, அனுக்கிரஹம் பெற்ற மேலை நாட்டவர்கள் பல்வேறு கால கட்டங்களில் தாங்கள் பெற்ற அனுபவங்களை சொல்லி இருக்கிறார்கள். அதிலிருந்தும் சிலவற்றை உங்கள் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன். இவைகளை படிக்கும் போது, மஹாபெரியவாளை அவர்கள் புரிந்து கொண்டதை போல, அனுபவித்ததை போல நாம் புரிந்து கொள்ளவும் இல்லை. அனுபவிக்கவும் இல்லை என்றே தோன்றுகிறது. உண்மையான ஆன்மீக தேடலில், ஆத்ம தாகத்தில் அவர்கள் இருந்திருக்கிறார்கள். மனித வாழ்க்கையின் முடிந்த முடிவான, "நான் யார்"? என்ற தேடலில் பெரியவாளை அணுகினார்கள். பலன் அடைந்தார்கள். ஆனால் நாமோ, நமது அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களையும், இடர்பாடுகளையும் நீக்கிக் கொள்ளவே, சுகமான வாழ்க்கையை பெறவே அவரை அண்டி வந்தோம், வருகிறோம் என்பதே மறுக்க முடியாத உண்மை. பிறவா வரத்தையே தர வல்ல அந்த தயாபரனை சில்லறை தேவைகளுக்காக அணுகி வருகிறோம். இனியாகிலும் நாம் அவரிடம் கேட்க வேண்டியதை யாசிக்க வேண்டியதை யாசித்து பெற முயல வேண்டும்.

"கோரிக்கையற்று கிடக்குதண்ணே, வேரில் பழுத்த பலா" - என்றபடி இல்லாமல், அள்ள அள்ள குறையாத அந்த அமுத சுரபியை, அட்சய பாத்திரத்தை சரியான வழியிலே பயன் படுத்திக்கொள்வோம். அதற்கான நல்ல சிந்தனையையும் அவரிடமே யாசித்துப் பெறுவோம்.

*நன்றி வணக்கம்!*

என்றென்றும் இறைப்பணியில்,

அன்புடன்,

கி. வேணுகோபால்

*****

# அப்பாலும் அடி சார்ந்தார்

*(டாக்டர் டி. எம். பி. மஹாதேவன்)*

("யார் உற்றார்? யார் அயலார்?" என்று அன்று மணிவாசகர் சிவபெருமானைப் பற்றி வினவியது இன்றைய சிவாஸ்தான மூர்த்திக்கும் அப்படியே பொருந்தும்: தேசம், மதம், கலாச்சாரம் இவற்றுக்கு அப்பாற்பட்டு, ஆச்சார்யர்களின் அடி சார்ந்துள்ள அடியார் குழாத்தின் சிலரைக் குறித்துப் பேராசிரியர் அவர்கள் சிறப்புக் கட்டுரை நல்குகிறார்)

ஒரு குறிப்பிட்ட சம்பிரதாயத்தை சேர்ந்தோர்க்கு மட்டுமன்றி, உலகம் முழுவதிலும் அஞ்ஞான இருளில் தவிப்போருக்கு ஞான ஒளியை பாய்ச்சுவதையே ஆதி சங்கரர் பிரவிப் பணியாகக் கொண்டு அவதரித்தார். இப்பணி அவரது அவதாரக் காலத்தோடு முற்றுப் பெற்றுப் போவது அல்ல. எக்காலமும் தொடர்ந்து வர வேண்டியது. இத் திருப்பணி தொடருவதற்காகவே அவர் நாட்டின் பல பகுதிகளிலும் மடங்களை நிறுவி அவற்றில் தமது திருநாமத்திலேயே ஆச்சாரிய பரம்பரையை ஏற்படுத்தினார். இவற்றுள் நானிலத்தின் ஞானதீபமான கச்சியம்பதியில் காமகோடி பீடத்தை ஸ்தாபித்தார். இப்பீடத்தில் ஆதிசங்கரரிலிருந்து தொடர்ந்து வந்துள்ள குரு பரம்பரையில் அறுபத்தி எட்டாமவராக திகழும் ஸ்ரீ பெரியவர்கள் ஆதி சங்கரரின் அதே நோக்கத்தைத் தமது ஒரே லக்ஷியமாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார்-அதாவது, ஒரு குறிப்பிட்ட சம்பிரதாயத்தைச் சேர்ந்தோரை மட்டுமின்றி உலகம் முழுவதையும் உள்ளூர உயர்த்தி உருமாற்றி பூரணத்துவத்தை நோக்கி முன்னேறச் செய்து வருகிறார்.

ஸ்ரீ பெரியவர்களின் அருள்மயமான தரிசன மாத்திரத்தில், அடியோடு கவரப்பட்டு, தங்களது உள்ளத்தில் ஓர் உன்னதப் புரட்சியை உணர்ந்த அந்நியர் பலர் பலர். 'சன்னியார்' என்பது நமக்குத்தான். மாமுனிவருக்கு ஏர் எவர் அந்நியம்?

நாற்பத்தி மூன்று ஆண்டுகளுக்கு முன், பெரியவர்களை சந்தித்து உரையாடிய பால்பிரண்டன் இந்த மேற்கத்தியர்களில் முதலாமவர். அன்றைய பெரியவர்களின் திருவுருவம் பற்றி அவர் எழுதினார். "எனது விஸ்தாரமான சித்திரசாலையில் அந்த உன்னதமான முகம் ஒரு மதிப்புக்குரிய ஸ்தானத்தை எடுத்துக் கொண்டு விட்டது. மத்திய சகாப்தம் எனப்படும் காலத்தை அணிசெய்த கிறிஸ்துவ மகான்களுக்கு அத்தகைய முகம் இருந்திருக்கக் கூடும்! ஒரே ஒரு வித்யாசம்: இம்முகத்தில் கூடுதலாக அறிவுத் திறனும் பிரதிபலித்தது. இப்போது நாற்பத்தி மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் பெரியவர்களின் என்பதாவது ஜெயந்தி கொண்டாட்டத்திற்கு பால்பிரண்டன் அளித்துள்ள வாழ்த்துறையில், இன்றைய உலக சூழ்நிலையில், பெரியவர்களின் பிற்விப் பணியை ஆற்றுவது எத்தனைக் கடினமானது எனக் குறிப்பிட்டு "ஸ்ரீ ஸ்வாமிகள் தமது வாழ்நாள் முழுவதும் இத்தனை அற்புதமாக எந்த மகத்தான பண்பாட்டிற்கு பணி புரிந்து இருக்கிறாரோ, அந்தப் பண்பாடே நமது மனிதகுல முயற்சிக்கெல்லாம் அத்தியாவசியமான அடிப்படையாக இன்றும் உயிர் வாழ்ந்தாக வேண்டும்" என்கிறார்.

பாலபிராண்டனுக்குப் பிறகு நாற்பதாண்டுகளில் பல தேசங்களை சேந்த அறிஞர்களும் ஆத்ம சாதகர்களுக்கு, சமயத் தலைவர்களும், கலைஞர்களும், ராஜ தந்திரிகளும்கூடக் காஞ்சி மாமுனிவரைச் சந்தித்து அதன் மூலம் பாரதத்தின் அமர பண்பாட்டை ஆழ்ந்து அறிந்து கொண்டிருக்கிறார்கள். 1955-ல் ஸ்ரீ பெரியவர்களை சந்தித்த சிகாகோ பல்கலை கழக பேராசிரியர் மில்டன் சிங்கர், இந்தியாவுக்கு செல்லும் முன் அந்நாட்டு மகான்களின் "ஆத்ம சக்தி" பற்றி நான் நிறைய படித்தும் கேள்விப்பட்டு இருக்கிறேன். ஆனால் இது ஏதோ புராண காலத்தை ஸ் ந்த சமாச்சாரமாகவே இருக்கும் என்று எண்ணி வந்தேன். சங்கராச்சாரியாரைக் கண்ட பின்னர் தான், இந்த "ஆத்ம சக்தி" இன்றும் இந்து மதத்தில் ஜீவ சக்தியாக அங்கம் வகிக்கிறது என்று உணர்ந்தேன்" என்றார்.

பிரசித்தி பெற்ற எழுத்தாளரான ஆர்தர் கோஸ்ட்லர் தமது நூல் ஒன்றில் ஆச்சாரியார்களின் திருமுகத்தில் ஓடிய இளநகை அவர்களைக் குழந்தையாக மாற்றிய அழகைப் பரக்க வருணித்து விட்டு, "அந்தப் புன்னகையோடும், அது வெளியிட்ட உணர்வோடும் உவமைத்துப் பேசக்கூடிய இன்னொன்றை நான் வேறெங்கும் கண்டதேயில்லை. அதன் ஆகர்ஷணமும் மாதுரியமும் அசாதாரணமாக இருந்தன" என்கிறார்.

பெரியவர்களின் திருஷ்டி விசேஷம் பற்றி அமெரிக்க அறிஞர் ஆர்தர் ஐசன்பர்க் கூறுவதை பாருங்கள். "என்னை நோக்கிய அந்த நயனங்களில் அறிவும், அன்பும், அருளும் அற்புதக் கலவையாக பின்னியிருந்தன. இவற்றோடுகூட எவ்விதமோ, மிகவும் மிருதுவான நகைச்சுவை உணர்வையும் அவை பிரதிபலித்தன.

1955-ல் ஸ்ரீ பெரியவர்க்களை சந்தித்த சிகாகோ பல்கலைக் கழகப் பேராசிரியர் மில்டன் ஸிங்கர், இந்தியாவுக்கு செல்லும் முன் அந்நாட்டு மஹான்களின், 'ஆத்ம சக்தி' பற்றி நான் நிறைய படித்தும், கேள்விப்பட்டு இருக்கிறேன். ஆனால், இது எதோ புராதன காலத்தைச் சேர்ந்த சமாச்சாரமாகவே இருக்கும் என்று எண்ணி வந்தேன். சங்கராச்சாரியரைக் கண்டா பின்னர்தான், இந்த 'ஆத்ம சக்தி' இன்றும் இந்து மாதத்தில் ஜீவா சக்தியாக அங்கம் வகிக்கிறது என்று உணர்ந்தேன் என்றார்.

பிரசித்தி பெற்ற எழுத்தாளரான ஆர்தர் கோஸ்ட்லர் தமது நூல் ஒன்றில் ஆச்சாரியார்களின் திருமுகத்தில் ஓடிய இளநகை அவர்களைக் குழந்தையாக மாற்றிய அழகைப் பரக்க வருணித்து விட்டு, "அந்தப் புன்னகையோடும், அது வெளியிட்ட உணர்வோடும் உவமைத்துப் பேசக்கூடிய இன்னொன்றை நான் வேறெங்கும் கண்டதேயில்லை. அதன் ஆகர்ஷணமும் மாதுரியமும் அசாதாரணமாக இருந்தன" என்கிறார். பெரியவர்களின் திருஷ்டி விசேஷம் பற்றி அமெரிக்க அறிஞர் ஆர்தர் ஐசன்பர்க் கூறுவதை பாருங்கள். "என்னை நோக்கிய அந்த நயனங்களில் அறிவும், அன்பும், அருளும் அற்புதக் கலவையாக பின்னியிருந்தன. இவற்றோடுகூட எவ்விதமோ, மிகவும் மிருதுவான நகைச்சுவை உணர்வையும் அவை பிரதிபலித்தன.

*****

# அறிய (அரிய) ஆலயம்: அற்புத தகவல்கள்

*திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர்*



**அமைவிடம்:** சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் மஹாபலிபுரம் செல்லும் சாலையில் அமைந்துள்ளது.

**ஆலய அமைப்பு:** கிழக்கு பார்த்த ராஜ கோபுரம் ஐந்து அடுக்குள்ளது. அழகிய மதில் சுவர் மற்றும் கண்கவரும் சிற்பங்களை கொண்டது. அப்பர் பெருமானார், திருஞான சம்பந்தரின் பல்லக்கை தாங்கி வருவது, கஜ சம்ஹார மூர்த்தி, தில்லைக்காளி ஆகியவை மனம் கவர்வது. மேலும் 16 கால் மண்டபத்தைக் கடந்து சென்றால், வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமி சந்நிதி, அதன் முகப்பில் கமலா விநாயகர் சந்நிதியும் அமைந்துள்ளன.

பதினெட்டு தூண்கள் கொண்ட வெளிமண்டபம், தூண்களில், தபஸ் கோலத்தில் காமாக்ஷி, சரபேஸ்வரர், நரசிம்மர், குபேரன், சடனட சித்தர் ஆகியோர் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக காட்சி அளிக்கின்றனர்.

தெற்கு முகமாய் அன்னை திரிபுர சுந்தரியம்மை நின்ற கோலத்தில் நான்கு திருக்கரங்களுடன் தனி சந்நிதியில் நின்று அருள்பாலிக்கிறாள். அருகில், சிம்ம வாகனமும், ஸ்ரீ சக்கரமும் இருக்கிறது. மேலும் சுக்ரவார அம்மன் சந்நிதியும் உள்ளன. சற்று இடப்புறம் திரும்பினால், விட்னெஸ்வரர் சந்நிதி, மூன்று மூலத திருமேனிகளுடன் விளங்குகின்றது. அருணகிரியார் திருப்புகழ் பாடிய க்ஷேத்ரம் இது.

மேற்கு பார்த்த சந்நிதியில், வான்மீக நாதர், லேசாக வடபுறம் சாய்ந்துள்ள திருக்கோலம். லிங்கத்திற்கு பாலபிஷேகம் மட்டுமே நடைபெறுகிறது. மற்ற அபிஷேகங்கள் ஆவுடையாருக்கே நடைபெறுகிறது.

அடுத்து உட்ப்ரஹாரத்தில், 108 சிவலிங்கங்கள், உடுக்கையும், சூலமும், ஏந்திய கால பைரவர், தொடர்ந்து, கேதாரேஸ்வரர், ராமநாதீஸ்வரர், சுந்தரேஸ்வரர், உண்ணா முலையம்மை, அண்ணாமலை நாதர், ஜம்புகேஸ்வரர் என்று பஞ்ச லிங்கங்களை தரிசிக்கலாம்.

பூமியை சமப்படுத்த தெற்கு நோக்கி வந்த அகஸ்தியருக்கு, சிவபெருமான், இங்கே வன்னி மரத்தடியில் தனது திருமணக் கோலத்தைக் காட்டியருளினார். அத்துடன் மருந்து பொருட்களையும், மருத்துவ முறைகளையும் உபதேசித்து இருக்கிறார். மேலும் வாலமீகி மகரிஷி முக்தி அடைவதற்காக இங்கே தவமியற்றி முக்தி அடைந்தார்.

வேதங்கள் பூஜித்த ஸ்தலம். காமதேனுவும் சாபம் நீங்கப்பெற்ற ஸ்தலம். உடல்நோய் மனநோய் ஆகியவைகளை தீர்க்கும் ஸ்தலம். தலவிருக்ஷம் வன்னி மரம். அவசியம் சென்று தரிசிக்க வேண்டிய ஸ்தலம்.

*****

# மஹாபெரியவா அருளுரை

*எனக்கு முக்கியம் அம்பாள்*




இடம்: *சிவாஸ்தானம் பிரம்மபுரீஸ்வரர் திருத்தலம்*, தேனம்பாக்கம்
Image taken at Sivasthanam Brahmabureeswarar Temple, Thenampakkam

எல்லா சாஸ்திரங்களும் முடிவில் ஞானம் அடைவதைத்தான் லட்சியமாக சொல்லுகின்றன. "ஞானம் " என்றால் எதை அறிவது? தன்னையே அறிவதுதான் ஞானம். தன்னை அறிகிறபடி அறிந்து விடுகிற போது, அந்த தானுக்கு வேறாக எதுவுமே இராது. சகலமும் அதற்குள் அடக்கம். ஆத்ம ஞானமே எல்லாவற்றையும் அறிகிற ஞானமாகிறது. நம் சரீரம், இந்திரியங்கள், மனசு எல்லாம் போன பிறகு மாறாமல் நிற்கிற சத்தியமாக இருப்பது இந்த ஆத்மா. மற்றதெல்லாம் மாறினாலும், இது மாறாமலே உள்ளபடி இருந்து கொண்டிருப்பதால், இதற்கு 'சத்' என்று பெயர். இந்த 'சத்;' வெறுமே இருந்து கொண்டிருந்தால் இல்லை. நான் ஸத்தாக என்கிற அறிவு, ஞானம், அனுபவம் அதற்கு இருந்தால்தான், ஆனந்தம் உண்டாகிறது. இப்படி தன்னையே தான் அறிந்து கொள்கிறபோது, 'ஸத்தானது 'ஸித் ' எனப்படும். ஸத் என்கிற உண்மையை ப்ரம்மம் என்றும் பரமேஸ்வரன் என்றும், 'ஸித் ' என்கிற அதன் அறிவை பராசக்தி என்றும் அம்பாள் என்றும் சொல்கிறோம். ப்ரம்ம ஞான ஸ்வரூபமாக இருக்கிற அவளை உபாசித்தாலே அவளுடைய அனுக்கிரகத்தால் நாமும் அந்த 'ஸத்துதான்' என்கிற ஞானத்தை அடைய முடியும். எப்போது பார்த்தாலும் சலித்துக் கொண்டும், மாறிக் கொண்டும், அழிந்து கொண்டும் இருக்கிற, ஏதோ ஒன்றாக நம்மை எண்ணி வருகின்றோம், உண்மையில் இது அல்ல நாம், எப்போதும் மாறாமல் இருக்கிற சத்தியமே நாம் என்கிற ஞானம் அனுபவ பூர்வமாக உண்டாகி, அதில் ஏற்படுகிற ஆனந்தமே மோக்ஷம். இகலோகத்தில் பலவிதமான சௌக்யங்களை அனுக்கிரஹம் செய்கிற அம்பாள், முடிந்த முடிவாக இந்த ஞானத்தை மோக்ஷத்தை அருளுகிறாள். அவள்

அனுகிரஹத்தினால்தான் ஜென்மா விடுதலையாகி மோக்ஷம் அடையலாம். அம்பாளை ஆராதிப்பதால் ஞானம் அவிர்பாவமாகி அஞ்ஞானம் விலகி மோக்ஷம் கிடைக்கிறது, என்பது சௌந்தர்யலஹரி, மூகபஞ்சசதி, ஆர்யா த்விசதி எல்லாவற்றிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

அஞ்ஞானம் தான் பெரிய அழுக்கு. துணி அழுக்கு இல்லாமல் இருந்தால் போதாது. உடம்பு அழுக்கு இல்லாமல் இருந்தால் போதாது. வீடு அழுக்கு இல்லாமல் இருந்தால் போதாது. நம் மனசு அழுக்கு இல்லாமல் ஆகவேண்டும். அழுக்கு போனால்தான், இதில் ஸத் வஸ்துவின் பிரகாசம், அழுக்கு துடைத்த கண்ணாடியில், சூரியன் பிரகாசிக்கிற மாதிரி, பளீரென்று அடிக்கும். இப்படி நம் அழுக்கை கழுவிக்கொள்ள அம்பாளுடைய சரணாரவிந்த த்யானந்தான் வழி. கொஞ்சம் கொஞ்சம் த்யானம் செய்தாலே, அதன் ருசி தெரியும். அம்பாளுடைய சரண கமலத்தைக் காட்டிலும் சாந்தி அளிக்கக்கூடியது வேறு எதுவும் இல்லை என்று புரிய ஆரம்பிக்கும். விடாமல் இப்படி த்யானம் செய்தால், முடிவில், இந்த உடம்பு போனபின், செத்தும் சாகாதவராகலாம்--அமிர்தமாகலாம் என்றும் நிலையாக இருக்கிற ஞானத்தில் இரண்டறக் கலந்து அமிர்தமாகலாலம்.

இப்படியெல்லாம் நான் உபதேசம் பண்ணுகிற நேரத்தைக் கூட, அவளுடைய தியானத்திலேயே செலவு செய்தால், இன்னும் எத்தனையோ மடங்கு ஆத்ம சாந்தி கிடைக்கும். இப்படிப் பேசுகிற பொழுதை அவள் த்யானத்தில் செலவிட்டால், என் தோஷங்கள் எத்தனையோ நீங்கும். இதைக் கேட்கிறபொழுதில் அவள் த்யானத்தில் செலவிட்டால், உங்கள் தோஷங்களும் எவ்வளவோ விலகும்.

இந்த உபன்யாசம் எல்லாம் உங்கள் திருப்திக்காக, தற்காலிக சாந்திக்காகவே பண்ணுகிறேன். அதோடுகூட, உங்களுக்கு விஷயங்களை விளக்க ஆரம்பிக்கிற போதுதான் எனக்கே இந்த விஷயங்கள் தெளிவாகின்றன. அதனால் என் நினைவையும் சுத்தப்படுத்திக் கொள்கிறேன்.

எனக்கு முக்கியம் அம்பாள். அம்பாளுடைய சரணார விந்தத்தைதான் லோக க்ஷேமார்த்தம் த்யானம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். எப்போதெல்லாம் குறை தோன்றுகிறதோ, அப்போது அம்பாளிடம் முறையிட்டு அந்தக் குறை இல்லாமல் இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். பிரத்தியாருக்கு உபதேசித்து திருத்துவதற்கு முன்னால் அவரவரும் தானே தப்பு பண்ணாமல் இருந்தால், போதும். இதற்கு அவளுடைய சரணகமலம்தான் கதி. எளிதில் நம் குறையை போக்கிக் கொள்ள த்யானம் என்கிற விசையை நமக்குள்ளேயே வைத்திருக்கிறாள். நீங்கள் எல்லோரும் உங்கள் ஆத்ம க்ஷேமத்திற்காகவும், லோக க்ஷேமத்திற்காகவும் அவளை த்யானம் செய்யவேண்டும். இதை எல்லோரும் விடாமல் செய்து கொண்டு இருந்தாலே போதும். ஒருத்தருக்கும் ஒரு கஷ்டமும் வராது. ஸம்ஸ்த பிரபஞ்சமும் பரம க்ஷேமமாக இருந்து வரும்.

*****

# பதிகம் பற்று

திருஞானசம்பந்தர் அருளியது இப்பதிகம். திருப்பாச்சிலாச்சிரம் என்னும் திருவாசி ஸ்தலத்தில் அருளியது. இலங்கை மன்னன் ஒருவனுடைய மக்களுக்கு பிடித்திருந்த நரம்பு சம்பந்தமான நோயை, இப்பதிகத்தை பாடி குணமாக்கினார். இதனை நம்பிக்கையுடன், பக்தியோடு ஒத்துவார்க்கு உள்ள பிணிகள் யாவும் நீங்கும். உயர் ரத்த கொதிப்பு, சர்க்கரை நோய், வலிப்பு எனும் நரம்பு சம்பந்தமான நோய் அனைத்தும் நீங்கும் என, மஹா பெரியவா, தேவாரம் டாக்டர், மற்றும் டன்லப் கிருஷ்ணன் மாமா அவர்களிடம் கூறி உள்ளார்.

துணி வளர் திங்கள் துளங்கி விளங்க, சுடர்ச்சடை சுற்றி முடித்து,
பணி வளர் கொள்கையர், பாரிடம் சூழ, ஆர் இடமும் பலி தேர்வர்.
அணி வளர் கோலம் எலாம் செய்து, பாச்சிலாச்சிராமத்து உறைகின்ற
மணி வளர் கண்டரோ, மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பே

கலை புனை மானுரி-தோல் உடை ஆடை; கனல் சுடரால் இவர் கண்கள்
தலை அணி சென்னியர்; தார் அணி மார்பர்; தம் அடிகள் இவர் என்ன,
அலை புனல் பூம் பொழில் சூழ்ந்து அமர் பாச்சிலாச்சிராமத்து உறைகின்ற
இலை புனை வேலரோ, ஏழையை வாட இடர் செய்வதோ இவர் ஈடே

வெஞ்சுடர் ஆடுவர், துஞ்சு இருள்; மாலை வேண்டுவர்; பூண்பது வெண்நூல்
நஞ்சு அடை கண்டர்; நெஞ்சு இடம் ஆக நண்ணுவர், நம்மை நயந்து
மஞ்சு அடை மாளிகை சூழ்தரு பாச்சிலாச்சிராமத்து உறைகின்ற
செஞ்சுடர் வண்ணரோ, பைந்தொடி வாடச் சிதை செய்வதோ இவர் சீரே

கன மலர்க்கொன்றை அலங்கல் இலங்க, கனல் தரு தூமதிக்கண்ணி
புன மலர் மாலை அணிந்து, அழகு ஆய புனிதர் கொல் ஆம் இவர் என்ன,
வனமலி வண்பொழில் சூழ் தரு பாச்சிலாச்சிராமத்து உறைகின்ற
மனமலி மைந்தரோ, மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பே

மாந்தர் தம் பால் நறுநெய் மகிழ்ந்து ஆடி, வளர்சடை மேல் புனல் வைத்து,
மோந்தை, முழா, குழல், தாளம், ஒர் வீணை, முதிர ஓர் வாய் மூரி பாடி,
ஆந்தைவிழிச் சிறு பூதத்தார் பாச்சிலாச்சிராமத்து உறைகின்ற
சாந்து அணி மார்பரோ, தையலை வாடச் சதுர் செய்வதோ இவர் சார்வே

நீறு மெய் பூசி, நிறை சடை தாழ, நெற்றிக்கண்ணால் உற்று நோக்கி,
ஆறுஅது சூடி, ஆடு அரவு ஆட்டி, ஐவிரல் கோவண ஆடை
பால் தரு மேனியர் பூதத்தர்; பாச்சிலாச்சிராமத்து உறைகின்ற
ஏறு அது ஏறியர்; ஏழையை வாட இடர் செய்வதோ இவர் ஈடே

பொங்கு இள நாகம், ஓர் ஏகவடத்தோடு, ஆமை, வெண்நூல், புனை கொன்றை,
கொங்கு இள மாலை, புனைந்து அழகு ஆய குழகர்கொல் ஆம் இவர் என்ன,
அங்கு இளமங்கை ஓர் பங்கினர்; பாச்சிலாச்சிராமத்து உறைகின்ற
சங்கு ஒளி வண்ணரோ, தாழ்குழல் வாடச் சதிர் செய்வதோ இவர் சார்வே

ஏ வலத்தால் விசயற்கு அருள்செய்து, இராவணன்தன்னை ஈடு அழித்து,
மூவரிலும் முதல் ஆய் நடு ஆய மூர்த்தியை அன்றி மொழியாள்
யாவர்களும் பரவும் எழில் பாச்சிலாச்சிராமத்து உறைகின்ற
தேவர்கள் தேவரோ, சேயிழை வாடச் சிதைசெய்வதோ இவர் சேர்வே

மேலது நான்முகன் எய்தியது இல்லை, கீழது சேவடி தன்னை
நீல் அது வண்ணனும் எய்தியது இல்லை, என இவர் நின்றதும் அல்லால்,
ஆல் அது மா மதி தோய் பொழில் பாச்சிலாச்சிராமத்து உறைகின்ற
பால் அது வண்ணரோ, பைந்தொடி வாடப் பழி செய்வதோ இவர் பண்பே

நாணொடு கூடிய சாயினரேனும் நகுவர், அவர் இருபோதும்
ஊணொடு கூடிய உட்கும் நகையால் உரைகள் அவை கொள வேண்டா
ஆணொடு பெண்வடிவு ஆயினர், பாச்சிலாச்சிராமத்து உறைகின்ற
பூண் நெடு மார்பரோ, பூங்கொடி வாடப் புனை செய்வதோ இவர் பொற்பே

அகம் மலி அன்பொடு தொண்டர் வணங்க, ஆச்சிராமத்து உறைகின்ற
புகை மலி மாலை புனைந்து அழகு ஆய புனிதர் கொல் ஆம் இவர் என்ன,
நகை மலி தண்பொழில் சூழ்தரு காழி நல்-தமிழ் ஞானசம்பந்தன்
தகை மலி தண் தமிழ் கொண்டு இவை ஏத்த, சாரகிலா, வினைதானே

# தாவர நோய்கள்: இந்துக்களின் அற்புத மூலிகை அறிவு

-லண்டன் ஸ்வாமிநாதன்

இந்துக்கள் வேத காலம் முதற்கொண்டு எல்லா அறிவியல் துறைகளிலும் கவனம் செலுத்தியுள்ளனர். அவைகளை சம்ஸ்க்ருதத்தில் எழுதியும் வைத்துள்ளதால் நமக்கு குறைந்தது 3000, 4000 ஆண்டு அறிவியல் வளர்ச்சி பற்றி அறிய முடிகிறது.

உலகிலேயே பழமையான நூலான ரிக் வேதத்தில் மூலிகைகளுக்காகவே ஒரு சூக்தம் ஒதுக்கியிருப்பதால் (ஓஷதி சூக்தம், ரிக் 10-97) எந்த அளவுக்கு அவர்களுக்கு மூலிகையின் பெருமை தெரிந்திருந்தது என்பதை அறிய முடிகிறது. முதல் மந் திரத்திலேயே 107 மூலிகைகள் பற்றிச் சொல்கிறார் ரிக் வேத கால டாக்டர். ஆயினும் அவரோ உரைகாரர்களோ நமக்கு 107 மூலிகைகளின் பெயர்களை சொல்லவில்லை. ஏனெனில் அக்காலத்தில் எல்லோருக்கும் அவை பற்றித் தெரியும். ஆனால் பிற்கால நூல்களான சுஸ்ருத சம்ஹிதா, சரக சம்ஹிதை பிருஹத் சம்ஹிதா முதலிய புஸ்தகங்கள் நமக்கு நிறைய மூலிகைகளின் பெயர்களை சொல்லி பயன்பாடுகளையும் அறிவிக்கின்றன.

அதர்வண வேத சூக்தங்களில் தாவரங்களை பல வகைகளாகப் பிரித்துப் பேசுவதால் அத்தகைய படிப்புகள் இருந்ததும் தெரிகிறது. பழம் கொடுக்கும் தாவரங்களை பலினி என்றும், பழம் தராத தாவரங்களை அபலா என்றும், பூக்கும் தாவரங்களை புஷ்பினி என்றும், பூவாத தாவரங்களை அபுஷ்பா என்றும், எப்போதும் பூத்துக் குலுங்கும் தாவரங்களை ப்ரஸூவரி என்றும் அழைத்தனர்

OLDEST BOTANICAL CLASSIFICATION (AV.8-7-26)

அதர்வ வேதத்தில் 8-7-26ல் ஒரே பாடலில் புஷ்பவதி, ப்ரஸூவதி, பலினீ, அபலா என்று வருவதால் உலகில் முதல் முதலில் தாவரங்களை வகைப்படுத்தியது இந்துக்கள்தான் என்பதும் தெளிவாகிறது.

தைத்ரீய சம்ஹிதையில் (யஜுர் வேதம்) மூல (வேர்) துல (பூங்கிளைகள்), காண்ட (தண்டு), வலச (மரக் கிளை), சாகா (பெரிய கிளைகள்) புஷ்ப, பல(பழம்) பர்ண (இலை) என்ற தனித்தனி சொற்கள் கையாளப் படுகின்றன. ஸதபதப் பிராஹ்மணம் மேலும் பல சொற்களை எடுத்தாளுகிறது. இவ்வளவுக்கும் இவை எதுவும் தாவரவியல் (Botany) நூல் அல்ல. மதம் தொடர்பான நூல்களே.

முதல்முதலில் வ்ருக்ஷ ஆயூர்வேத என்ற சொல்லை 2300 ஆண்டுகளுக்கு முந்தைய கௌடில்யரின் (சாணக்கியரின்) அர்த்த சாஸ்திரத்தில் (2-24-1) காண்கிறோம். மரங்களின் ஆரோக்கியத்தை பராமரிக்கும் அற்புத துறை அது. விவசாய டைரக்டருக்கு (Director of Agriculture in Arthasasatra) க்ருஷி தந்த்ர/விவசாயம், சுல்வ, வ்ருக்ஷ ஆயுர்வேத தெரிந்திருக்கவேண்டும் அல்லது இவைகளை அறிந்த ஒருவரை உதவியாளராக

வைத்திருக்கவேண்டும் என்று சாணக்கியர் சொல்கிறார். அந்தந்த பருவத்தில் விதைகளைச் சேகரித்து வைக்கவேண்டும் என்றும் விளம்புகிறார். ஆகவே 2300 ஆண்டுகளுக்கு முன்னர் வேளாண் துறையும் அதற்கான அதிகாரிகளும் இருந்தது தெரிகிறது. முக்கியமான விஷயம் மரங்களுக்கான ஆயூர் வேதம் என்பதாகும்.

பின்னர் கஸ்யப சம்ஹிதா, வராகமிஹிரர் எழுதிய பிருஹத் சம்ஹிதா, விஷ்ணு தர்மோத்தர புராணம் (இரண்டாவது காண்டம்- அத்தியாயம் 300), அக்கினி புராணம் (282 ஆவது அத்தியாயம்) சுர பால எழுதிய வ்ருக்ஷ ஆயூர்வேத நூல்களில் மேல் விவரங்களை அறிகிறோம். தாவரவியல் தொடர்பான அபூர்வ விஷயங்களை இவை, போகிற போக்கில், சொல்கின்றன. ஆயினும் மரங்களுக்கு வரும் நோய்களை விவாதித்து குணப்படுத்துவது எப்படி என்பதை சுர பால எழுதிய வ்ருக்ஷ ஆயூர்வேத புஸ்தகத்தில் மட்டுமே காண முடிகிறது

மரங்களுக்கு ஏற்படும் கெடுதிகளை ஆறுகாரணங்களாகப் பிரிக்கிறது கஸ்யப சம்ஹிதா.

1. கடுங்குளிர்
2. கடும் வெப்பம்
3. கன மழை
4. சூறாவளிப் புயல்
5. மரங்களின் வேர்கள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைதல்
6. யானைகள் உராய்தல்

சீதோஷ்ண வர்ஷ வாதாதைர்மூலே வ்யாமிஸ்ரிதை ரபி

சாகினாம் து பவேத் ரோகோ த்விபானாம் லேகனேன ச – கஸ்யப சம்ஹிதா, பாடல் 71

இன்று நாம் பத்திரிக்கைகளைத் திறந்தால் இவற்றில் முதல் 4 காரணங்களால் பயிர்கள் அழி வதைப் படிக்கிறோம். ஐந்தாவது காரணம் நெருக்கமாகத் தாவரங்கள் வாழ்ந்தால் வரும் கேடுகள் பற்றிப் பேசுகிறது. யானைகள் உராய்தல் பற்றி சங்க இலக்கியப் பாடல்களில் காண்கிறோம். தமிழ்ப் புலவர்களும் சங்க காலத்திலேயே இதைக் கண்டு பாடலில் சேர்த்துள்ளனர்.

தாவரங்களுக்குக் கீழே வேர்கள் பின்னிப் பிணைந்தால் அவைகள் நன்றாகக் காய்க்காது என்று விஷ்ணு தர்மோத்தர புராணம் செப்புகிறது

அப்யாஸ ஜாதா தரவஹ ஸம் ஸ் ப்ருச ன்தஹ பரஸ்பரம்
அவ்யக்த மிஸ்ர மூலத்வாப வந்தி விபலா த்விஜ
தேஷாம் வ்யாதி ஸமுத்பதௌ ச்ருணு ராம சிகித்ஸதம்

வராஹ மிஹிரர் எழுதிய ப்ருஹத் சம்ஹிதா ஒரு கலைக்களஞ்சியம். அவர் 54 ஆவது அத்தியாயத்தில் 31 ஸ்லோகங்களில் விருட்ச (வ்ருக்ஷ) ஆயுர்வேதம் பற்றிப் பாடுகிறார். இலைகள் உதிர்தல், கிளைகள் காய்ந்து போதல், வளர்ச்சி தடைப்படுதல் முதலியவற்றை பருவ நிலை எப்படி உண்டாக்குகிறது என்று வராஹ மிஹிரர் விளக்குகிறார். மரங்களின் இலைகள் பச்சையத்தை இழந்து பாண்டுபத்ரதா (வெண்மை) ஆவதையும் கதைக்கிறார்.

நோய்கள் பற்றிச் சொல்வதோடு சிகிச்சை பற்றியும் சொல்கிறார்.

மரங்களின் கிளைகள் பாதிக்கப்பட்டால் அவைகளை வெட்டி, அந்த இடத்தில் களிம்பு தடவ வேண்டும் என்றும் பாலையும் தண்ணீரையும் கலந்து தெளிக்க வேண்டும் என்றும் கூறுகிறார் நூலாசிரியர் வராகமிஹிரர். பழங்கள் காய்க்காவிட்டால் ஆட்டுப் புழுக்கை, எள், பார்லி மாவு, மாட்டு மாமிசம் ஆகியவற்றைக் கலந்து 7 நாட்களுக்கு சிகிச்சை தர வேண்டும் என்பார். இன்று எவ்வளவோ நல்ல உரங்கள் வந்திருக்கலாம். 1500 ஆண்டுகளுக்கு முன்னரே இதன் துவக்கத்தை அவர் எழுத்தில் வடித்தது ஆய்வு மனப்பாண்மையைக் காட்டுகிறது

*****

# அறிவீர் அன்னதானத்தை

பரமன் என்பவன் புது வீடு கட்டி கிரகப்பிரவேசம் செய்திருந்தான். பழைய வீட்டில் இருந்து புது வீட்டிற்கு அவன் வந்துபல மாதங்கள் ஆகிவிட்டன. ஆனாலும் அவனுக்கு புது வீடு ஒரு நிம்மதியான வாழ்க்கையை கொடுக்கவில்லை. இதை எண்ணி வருந்திய பரமன் ஏதாவது பூஜை பண்ணினால் ஏதேனும் நன்மை கிடைக்குமா என்று தேட ஆரம்பித்தான். அப்போது அவனுக்கு ஆலமரத்தடியில் மகான் ஒருவர் வந்திருப்பதாக தகவல் தெரிந்தது. பரமனும் அவரைப் பார்த்து தன்னுடைய குறைகளை கூறி நிவர்த்தி கூறுமாறு வேண்டினான். மகானும் பரமனிடம் உனது குறை நீங்க நீ அன்னதானம் செய்;' என்று கூறி தியானத்தில் ஆழ்ந்தார். உடனே பரமனும் தனது வீட்டிற்கு வந்து அன்னதானத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் தடபுடலாக செய்தான். அன்னதானம் செய்வதற்கான நாள் குறிக்கப்பட்டது. பரமன் தனது உறவினர்கள், நண்பர்கள், ஊர்காரர்கள் எல்லோரையும் அழைத்திருந்தான். அன்னதானம் துவங்குவதற்கு உண்டான நாள் வந்தது. பரமன் தனது வண்டியை எடுத்துக்கொண்டு பழம் வாங்க கடைக்குச் சென்றான்.

அப்போது அவன் எதிரே இரண்டு பிச்சைக்காரர்கள் வந்து யாசகம் கேட்டனர். பரமனும்' நான் அவசரமாக போய்க்கொண்டிருக்கிறேன். பிறகு வாருங்கள்' என்றான். பிறகு கடைக்கு சென்று பழம் வாங்கி திரும்புகிற வழியில் கைக்குழந்தையுடன் கண்ணீர் மல்க ஒரு பெண்' ஐயா சாப்பிட்டு ரெண்டு நாளாச்சு ஏதாவது கொடுங்கள்' என்று கை ஏந்தினாள். பரமனும்' நகர்ந்து போ எனக்கு நேரமாகிறது' என்று கூறி வண்டியை வேகமாக எடுத்து நகர்ந்தான்.

அவன் வீட்டிற்கு வரும் வழியில் ஒரு நல்ல படித்த வாலிபர் ஒருவர் வண்டியை நிறுத்தி' ஐயா நான் வெளியூரில் இருந்து வருகிறேன். நான் இங்கிருந்து வேறு ஊருக்கு செல்வதற்கு இன்று மாலை தான் பஸ் இருக்கிறது. இந்த ஊரில் சாப்பிடுவதற்கு என்று ஏதேனும் நல்ல உணவகம் இருக்கிறதா/' என்று கேட்டான். பரமனும்'' இங்கிருந்து நல்ல உணவகத்திற்கு இரண்டு கிலோமீட்டர் செல்ல வேண்டும்'' என்றான். அதற்கு அந்த வாலிபன் 'அவசர வேலையால் நேற்று மதியம் நான் சாப்பிட்டது. இங்கு அருகில் ஏதாவது டீக்கடை இருந்தால் சொல்லுங்கள்'' என்றான். அதற்கு பரமனும்' 'எனக்குத்தெரிந்து ஒன்றுமில்லை. நீ வேறு யாரையாவது கேட்டுக்கொள்'' 'என்றான். பிறகு வண்டியை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான். தடபுடலாக அனைவருக்கும் அறுசுவை உணவை வழங்கினான். நாட்கள் ஓடின. ஒரு. மாதம் கழிந்தது. பரமனின் நிலை மாறியதாக தெரியவில்லை. பரமனும் பணம் செலவழித்ததுதான் மிச்சம். அன்னதானத்தால் ஒரு முன்னேற்றமும் இல்லை என்று வருத்தப்பட்டு கொண்டான்.

மீண்டும் போய் மகானை சந்தித்தான், பரமன்மகானிடம்,'' சுவாமி நீங்கள் சொன்னது போல எனது சக்திக்கு ஏற்ற வகையில் மிகச்சிறப்பாக அன்ன தானம் செய்தேன். ஆனால் ஒரு வழியும் பிறக்கவில்லை. தாங்கள் தான் ஏதேனும் சொல்ல வேண்டும்' என்றான்.

மகான் கண்களை மூடி சிறிது நேரம் கழித்து கண்களைத் திறந்து' பரமா இல்லாதவர்களுக்கும். பசியால் துன்பப்படுபவர்களும் உணவு கொடுப்பதே அன்னதானம். உனது உறவுகளுக்கும்

வசதி உள்ளவர்களுக்கும் உணவு உள்ளவர்களுக்கும் கொடுப்பது அன்னதானம் அல்ல. அதற்கு பெயர் விருந்து. நீ செய்தது விருந்தே ஒழிய அன்னதானம் அல்ல. இனியாவது புரிந்து நடந்து கொள் சுபிட்சம் பிறக்கும்' என்றார். பரமனும் தனது தவறை உணர்ந்து வேதனைப்பட்டான்.

அன்பர்களே நம்மில் பலரும் பரமனை போலத்தான் அன்னதானம் என்பது என்னவென்றே தெரியாமலேயே செய்து கொண்டிருக்கிறோம். வசதி இருப்பவர்களுக்கே உணவு கொடுத்துக் கொண்டு அதை அன்னதானம் என்று நம்புகிறோம். தேவையானவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் கொடுப்பதே அன்னதானம் என்று புரிந்து கொள்வோம்.

வாழ்க வையகம். ஏழைகளுக்கு உதவி பலன் பெறுவோம்.

வாழ்க வையகம், வாழ்க வளமுடன்!!

அன்புடன்

மனோகர்

குவைத்

*****

# ஆணிவேர்

அனைவருக்கும் நமஸ்காரம்.

முழு முதற்கடவுளான விநாயகரை வேண்டிக் கொண்டு இந்த கார்த்திகை மாதத்தில் எங்கு நோக்கினும் காணும் தீப ஒளியை கண்களால் வணங்குகிறோம். மேலும் சுவாமி அய்யப்பன் சரணம் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. தீப ஒளியும் சரணகோஷஒலியும் அற்புதமாக உள்ளது ஸ்வாமியே சரணம் ஐயப்பா அறிந்தும், அறியாமலும் தெரிந்தும் தெரியாமலும் செய்த சகல குற்றங்களையும் பொறுத்து காத்து ரட்சித்து அருள் புரிய வேண்டும் சத்தியமான பொன்னும் 18ஆம் படி மீது உலாவும் காசி ராமேஸ்வரம் பாண்டி மலையாளம் அடக்கி ஆளும் அய்யன் ஐயப்ப சுவாமியே சரணம்.

இறைவன் எல்லாவற்றையும் இருள், ஒளி நீர், நெருப்பு ஆண், பெண் என்று இரண்டு இரண்டாக படைத்துள்ளார். மனிதர்களுக்கும் கண்கள், காதுகள், கைகள், கால்கள் இவைகளை இரண்டாக படைத்துள்ளார். மனித வாழ்க்கையில் இளமை, முதுமை இன்பம், துன்பம் போன்றவை தவிர்க்க முடியாதவைகள். வாழ்க்கை பாதை என்பது மேடு, பள்ளம் நிறைந்தது. வண்டி ஓட்டும்போது இவைகளை கவனித்து ஓட்டுவது போல வாழ்க்கை என்னும் பாதையை ஒவ்வொருவரும் கவனித்து கடக்க முயற்சிக்கவேண்டும். இறைவன் அருளால் தான் எல்லாம் கடந்து போகும் என்பதை நாம் அனைவரும் உணர்ந்து நடக்க வேண்டும். ‘படித்ததினால் அறிவு பெற்றோர் ஆயிரம் உண்டு பாடம் படிக்காத மேதைகளும் பாரினில் உண்டு’ என்ற வரிகளை நாம் எப்படி மறக்க முடியும்.

எல்லோருக்குமே எல்லா வாய்ப்பும் கிடைப்பதில்லை. அதுபோலத்தான் நம்மில் சிலருக்கு கல்வியறிவு இல்லாமல் இருக்கின்றது. நான் இத்தனை காலம் பலன் தரும் பதிகங்களை பாராயணம் செய்து பலன் அடைந்தவர்களை பற்றி எழுதினேன். தற்போது படிப்பறிவே இல்லாதவர்கள் அடைந்த பயனைப் பற்றி இறைவனின் பாத கமலங்களை வேண்டி இத்தொடரில் எழுதுகின்றேன்.

அடர்ந்த காடுகள் நிறைந்த மலை கிராமம் ஒன்றில் ஒரு ஏழ்மையான குடும்பம். வயதான தந்தை, தாய், மகன், மருமகள், இரண்டு பேரக்குழந்தைகள். மகன் சிவாவும், மருமகள் காமாட்சியும் கூலி வேலைக்கு செல்பவர்கள். கிடைக்கும் வருவாயை வைத்துக்கொண்டு வீண் செலவுகள் செய்யாமல் குடும்பம் நடத்தி வந்தனர்.

ஒருநாள் காமாட்சி தற்செயலாக அடிபட்டு விழுந்து விட்டாள். பலமான காயம் எதுவும் ஏற்படவில்லை. வலி இரண்டு நாட்களில் நின்று விட்டது. சில நாட்களுக்கு பிறகு கண்ணில் வலி ஏற்பட்டது. தூரத்தில் இருப்பவர்கள் அவளுக்கு சரியாக தெரியவில்லை. அங்குள்ள சிறிய மருத்துவமனைக்கு காமாட்சி சென்று காண்பித்தாள். அங்குள்ள மருத்துவர் ‘உங்களுக்கு கண்ணில் சதை வளர்ந்து உள்ளது. நீங்கள் கண் மருத்துவமனைக்கு சென்று அறுவை சிகிச்சை

செய்து பிறகு கண்ணில் லென்ஸ் பொருத்தப்படும் இதற்கு அதிகம் செலவாகும் 'என்றார். காமாட்சி மிகுந்த வருத்தத்தோடு வீடு திரும்பினார். வரும் வழியில் உள்ள ஐயப்பன் கோயில் அருகில் நின்று கண்ணீர் மல்க வேண்டினார். கோவிலின் உள்ளே ஐயப்பன்மார்கள் சரணங்கள் சொல்வது காமாட்சியின் காதில் விழுந்தது. காமாட்சி "இறைவா எனக்கு உறுதுணை தாங்கள் மட்டும் தான். பார்வை இல்லாமல் நான் எப்படி வாழ்வது. வேலை பார்க்காவிட்டால் குடும்பம் எப்படி நடக்கும். இந்த ஏழைக்கு எந்த வழியிலாவது கருணை காட்டு" என்று கண்ணீர் மல்க வேண்டினார்.

வீட்டிற்கு வந்து மறுநாள் வழக்கம்போல் வேலைக்கு சென்றாள். வேலைக்கு செல்லும் போதும், வேலை செய்யும் போதும், வீட்டிற்கு வரும் போதும்'இறைவாஎனக்கு ஒரு வழி காட்டு' என்றுதான்வேண்டினாள். ஒரு வாரம் கழித்து ஒரு திருமணத்திற்கு செல்ல வேண்டியிருந்தது. காமாட்சி தோழி மகேஷ் வரியுடன் திருமணத்திற்குசென்றாள். அதிகாலையிலேயே திருமணம் நடந்து முடிந்துவிட்டது. அங்கு வந்த தூரத்து உறவினர் ஒருவர் காமாட்சியிடம் நலம் விசாரித்தார். அப்போது காமாட்சி அவரிடம் தன் பிரச்சனையை பற்றி கூறினாள். அதற்கு' கவலைப்படாதே அம்மா இங்கு அருகில்தான் அரசு கண் மருத்துவமனை இருக்கின்றது. அங்கு சென்றுகாண்பி. நல்லதே நடக்கும்' என்று கூறி மருத்துவமனைக்கு வழியும் சொன்னார். அவர் பெயர் மணிகண்டன்.

காமாட்சி மகேஸ்வரி உடன் கண் மருத்துவமனைக்கு சென்று அங்குள்ள மருத்துவரிடம்காண்பித்தாள். மருத்துவர் அவளைப் பரிசோதித்த பின் "அம்மா உங்களுக்கு உடனே அறுவை சிகிச்சை செய்ய வேண்டும்." இங்கேயே அட்மிட் ஆகுங்கள் 'என்று கூறி சீட்டு எழுதிக் கொடுத்தார்.

காமாட்சியும், மகேஸ்வரியும் அங்குள்ள நர்சிடம் விவரம் கேட்டனர். அதற்கு அவர் 'அம்மா உங்களுக்கு இலவசமாக அறுவை சிகிச்சை செய்து பிறகு லென்ஸ் பொருத்தப்படும். மேலும் மூன்று வேளையும் உணவும் வழங்கப்படும். நாளைக்கு தான் அறுவை சிகிச்சை இன்று இரத்தம் மற்றும் பல பரிசோதனைகள் செய்வதற்காக அட்மிட் செய்ய டாக்டர் கூறியுள்ளார்" என்று விபரமாகக் கூறினார்.

இதைக் கேட்ட காமாட்சிக்கு வார்த்தைகளே வரவில்லை. காமாட்சியிடம் மகேஸ்வரி "நீ இங்கேயே இரு நான் போய் உன் கணவரிடம் விபரத்தை கூறி வரச் சொல்கிறேன்" என்று கூறி அவளை அட்மிட் செய்தபிறகு கிளம்பினாள்.

காமாட்சி இறைவன் மணிகண்டன் மூலம் தனக்கு வழி காட்டியதை எண்ணி கண் கலங்கினாள். "ஐயப்பா, உன் கருணையே கருணை" என்று மனதார வேண்டினாள். அவளுக்கு எல்லா பரிசோதனைகளும் எடுக்கப்பட்டது. மறுநாள் காலையில் அறுவை சிகிச்சை செய்து லென்ஸ் பொருத்தப்பட்டது. அவள் கணவன் அருகில் இருந்தார். பிறகு மறுநாள் அவளை வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள்.

ஊருக்கு வந்து ஒரு வாரம் ஓய்வெடுத்த பிறகு வேலைக்கு சென்றாள். அவளுக்கு தோட்ட வேலை தான் தெரியும். செடி வளர ஆணிவேர் நன்றாக இருக்க வேண்டும். வேர் தான் அவ்வளவு பெரிய மரத்தை தாங்குகிறது. அதுபோலத்தான் தன்னை இறைவன் தாங்கிவிட்டார் என்று எண்ணி நன்றி கூறினாள்.

அன்பர்களே வண்டி உருண்டோட அச்சாணி தேவை. வாழ்க்கை உருண்டோட இறை நம்பிக்கை என்ற ஆணிவேர் வேண்டும். இறைவன் நம் வேண்டுதல்களை தக்க நேரத்தில் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையோடு வாழ்வோம். மீண்டும் சந்திப்போம்.

அனைவருக்கும் நன்றி, திருச்சிற்றம்பலம்

அன்புடன்

கலாவதி, ஊட்டி

*****